# இந்தியாவை ஆராய்வோம்
# இந்திய மொழிகளில் உரையாடல்கள்

*நீங்கள் செல்லும் மாநில மக்களுடனான உங்கள் உரையாடலின் ஒரு பகுதியாக பின்வரும் வாக்கியங்கள் இருக்கலாம். ஒவ்வொரு நாளின் அடிப்படைத் தேவைகளுக்கும், ஒரு மாநிலத்தையும் அதன் சிறப்புமிக்க வரலாற்று சிறப்பை அறிந்து கொள்வதற்கும் மாநில மொழியின் பயன்பாடு முக்கியமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் உரையாடலை விறுவிருப்பாக்கவும் பொருத்தமான கேள்விகளைக் கேட்பதற்கும் மையக்கருத்துக்களையும் வாக்கியங்களின் வரிசைமுறையையும் மாற்றியமைக்கலாம்.*

*மாநிலத்தைப் பற்றி அறியவும் பயணத்திட்டம் மேற்கொள்ளவும் ஆவண உரிமைசார்ந்த இணையதளங்களைப் பார்வையிடுமாறு நாங்கள் அறிவுறுத்துகிறோம்.*

**மொழி**

1. *தங்கள் மண்டலத்தின் முக்கிய மொழி என்ன?*
2. *தங்கள் மாநிலத்தில் என்னென்ன மொழிகள் பேசப்படுகின்றன?*
3. *தங்கள் மாநிலத்தின் அலுவலக மொழி என்ன?*
4. *தங்கள் மாநிலத்தின் எழுத்து முறை (வரிவடிவம்) என்ன?*
5. *தங்கள் மாநில மொழியின் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன?*

**மாநிலம்**

6. *தங்கள் மாநில எல்லைப் பகுதியிலுள்ள மாநிலங்கள் எவை?*
7. *தங்கள் மாநிலம் எந்த ஆண்டு உருவானது?*
8. *தங்கள் மாநிலத்தில் எத்தனை சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன?*
9. *தங்கள் மாநிலத்தின் முதலமைச்சர் யார்? ஆளுநர் யார்?*
10. *தங்கள் மாநிலத்தின் உயர்நீதிமன்றம் எங்குள்ளது?*
11. *தங்கள் மாநிலத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?*
12. *தங்கள் மாநிலத்தின் கல்வி அமைச்சர் யார்?*

**இயற்கை எழில் மிகுந்த இடங்கள்**

13. *சரி, தங்கள் பகுதியிலுள்ள இயற்கை எழில் மிகுந்த இடங்களைப் பற்றி கூறுங்கள்.*
14. *இப்பகுதியை இணைக்கும் முக்கிய தேசிய நெடுஞ்சாலையைக் கூற முடியுமா?*
15. *இயற்கை எழில் மிகுந்த அனைத்து இடங்களை ஒரே நாளில் பார்க்க முடியுமா?*

**கல்வி நிறுவனம்**

16. *தங்கள் மாநகரம் / நகரத்தில் உள்ள கல்வி நிறுவனங்களைப் பற்றி அறிய விரும்புகிறேன்*
17. *நிறுவப்பட்ட மற்றும் அறியப்பட்ட கல்வி நிறுவனத்தைப் பற்றிக் கூற முடியுமா?*
18. *உயர்கல்விக்காக எந்தெந்த நிறுவனங்கள் உள்ளன?*
19. *தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களைப் பற்றி கொஞ்சம் கூறுங்கள்.*
20. *ஒரு தொடக்கப் பள்ளியைப் பார்வையிட விரும்புகிறேன்! நான் எந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்? எப்படிச் செல்ல வேண்டும்? கூறுங்கள்.*

**சந்தை**

21. *தங்கள் பகுதியின் மிகப் பழமையான சந்தை எது? அது எங்குள்ளது?*
22. *அந்தச் சந்தைக்கு எளிய வழியில் செல்ல வழி கூறுங்கள்.*
23. *தங்கள் பகுதியிலுள்ள மிகப் பழமையான அந்தச் சந்தையின் தனிச் சிறப்பு என்ன?*

**பண்டிகை**

24. இவ்விடத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளைப் பற்றியும் கொஞ்சம் கூறுங்கள்.
25. நீங்கள் பண்டிகையை விரைவில் கொண்டாடப் போகிறீர்களா?
26. உங்கள் மாநிலத்தின் முக்கியப் பண்டிகைகள் என்னென்ன?
27. உங்கள் மாநிலத்தில் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகைகள் என்னென்ன?
28. உங்கள் மாநிலத்தில் ஒருங்கிணைக்கப்படும் முக்கிய கண்காட்சிகள் யாவை?

***சமையற்கலை***

29. *உள்ளூர் உணவுகளை சுவைக்க விரும்புகிறேன். நான் உணவு சுவைத்து மகிழச் சில உணவகங்களைக் கூறுங்கள்.*
30. *தங்கள் நகரத்தின் சிறப்பு வாய்ந்த உணவு வகைகள் என்னென்ன?*
31. *இனிப்பு அல்லது உப்பு உணவு வகைகள் / நொறுவைப் பண்டங்கள் தனித்துவம் வாய்ந்ததாக தங்கள் நகரத்தில் உள்ளனவா?*
32. *உணவு வகைகள் / நொறுக்குப் பண்டங்களுக்கான தனித்தன்மை வாய்ந்த சில சமையல் குறிப்புகள் தங்கள் நகரத்தில் உள்ளனவா?*
33. *பண்டிகைக் காலங்களில் சிறப்பு உணவு வகைகள் உள்ளனவா?*
34. *உங்கள் நகரத்தில் மட்டும் சமைக்கப்படும் சிறப்பு உணவுகள் ஏதேனும் உள்ளனவா?*
35. *உங்கள் மாநிலத்திலும் மண்டலத்திலும் உள்ள பாரம்பரிய உணவு என்ன?*
36. *பண்டிகைக் காலங்களில் சமைக்கப்படும் சிறப்பு உணவு வகைகள் என்ன?*
37. *வீட்டில் தயாரிக்கப்படும் இனிப்புப் பண்டங்கள் எவை?*
38. *வழக்கமாக வீட்டில் தினந்தோறும் சமைக்கப்படும் உணவு எது?*

***இயற்கை வளங்கள்***

39. *உங்கள் பகுதியில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், குளங்கள் போன்ற இயற்கை நீர் வளங்களைப் பற்றி கூறுங்கள்.*

***மலைப் பகுதி***

40. *இங்கு ஏதேனும் மலைப் பகுதி உள்ளதா? இப்பகுதியின் மலைத்தொடரின் பெயர் என்ன?*
41. *தங்கள் பகுதியில் உள்ள ஏதேனும் பார்க்கக்கூடிய / தெரிந்துகொள்ளக்கூடிய மிக முக்கியமான இடங்களைப் பற்றியும் கூறுங்கள்.*

***பருவகாலம்***

42. *பொதுவாக இங்கு வானிலை எப்படி இருக்கும்?*
43. *உங்கள் நகரத்திற்குச் செல்ல உகந்த காலம் எது?*

***பயிர்***

44. *இங்குள்ள முக்கிய பயிர் எது?*
45. *விவசாய நிலங்களில் இந்நாட்களில் எந்த பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன?*

***பாட்டு, இசை, நடனம், கலை, பண்பாடு, கலை வடிவங்கள்***

46. *உங்கள் நகரத்தில் புகழ்பெற்ற கைவினைப்பொருட்கள் எவை?*
47. *உங்கள் நகரத்தில் புகழ்பெற்ற நாட்டுப்புறக் கலைகள் எவை?*
48. *உங்கள் நகரத்தின் புகழ்பெற்ற கைவினைப் பொருட்களை வாங்க விரும்புகிறேன். பொருத்தமான இடத்தைக் கூற முடியுமா?*
49. *உங்கள் நகரத்தின் நாட்டுப்புற நடனத்தை நேரடியாக காண வேண்டும் என்று நான் நீண்ட காலமாக ஆசைப்படுகிறேன். நான் அவற்றை எங்கு காணலாம்?*
50. *உங்கள் ஊரின் நாட்டுப்புற பாடல் நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்புகிறேன். அவை எங்கு நடைபெறுகின்றன?*
51. *உங்கள் நகரத்தில் எந்த நாட்டுப்புற நடனம் பரவலாக உள்ளது?*
52. *நீங்கள் என்ன நடனம் ஆட விரும்புகிறீர்கள்?*
53. *யாரிடம்/எங்கிருந்து/எப்போது நடனம் கற்றீர்கள்?*
54. *உங்கள் நகரத்தில் எந்த நடனங்கள் புகழ்பெற்று உள்ளன?*
55. *நான் நடனம் கற்க விரும்பினால் அதை உங்கள் நகரத்தில் எங்கு கற்க முடியும்?*
56. *உங்கள் நகரத்தில் நடனத் துறையில் புகழ்பெற்றவர்கள் யாவர்?*
57. *உங்கள் நகரத்தில் எந்த இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன : தயாரிக்கப்படுகின்றன?*
58. *உங்கள் நகரத்தில் இசைக்கருவிகளை மீட்ட எங்கு கற்பிக்கப்படுகிறது?*
59. *திருவிழாக்கள், திருமணம் போன்ற நிகழ்வுகளில் உங்கள் நகரத்தில் உள்ள வீடுகளில் பாடப்படும் பாடல்கள் யாவை?*
60. *உங்கள் நகரத்தில் விளையாடும் போது குழந்தைகள் என்ன விளையாட்டுப் பாடல்களைப் பாடுகிறார்கள்?*
61. *உங்கள் நகர மக்கள் வழக்கமாக வரையும் ஓவியங்கள் என்ன?*

62. உங்கள் நகரத்தில் பாரம்பரிய கலைகளின் அருங்காட்சியகம் உள்ளதா? நான் எப்படி அங்கு செல்வது?
63. உங்கள் நகரத்தில் ஏதேனும் விழாக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? எங்கே? எப்பொழுது?
64. விழாக்காட்சி நடைபெறும் இடத்தை நான் எவ்வாறு சென்றடைவது?
65. உங்கள் நகர விழாக்காட்சியின் சிறப்புத் தன்மை என்ன?
66. உங்கள் நகரத்தில் நடக்கும் விழாவிற்கு எவ்வகையான நாட்டுப்புற கலைஞர்கள் வருகிறார்கள்?
67. உங்கள் நகரத்தில் எந்தெந்த திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன? எவ்வாறு கொண்டாடப்படுகின்றன?
68. உங்கள் நகரத்தில் பொழுதுபோக்கிற்காக மக்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் எங்கு செல்கிறார்கள்? / உங்கள் நகரத்தில் பொழுதுபோக்கு இடங்கள் உள்ளனவா?
69. உங்கள் நகரத்தில் புகழ்பெற்ற பாரம்பரிய உணவுகள் யாவை? அவற்றை எப்படி சமைப்பது என்று உங்களுக்குத் தெரியுமா? நான் அந்த உணவுகளைச் சாப்பிட விரும்பினால் நான் எங்கு செல்ல வேண்டும்?
70. உங்கள் நகரத்தின் உணவு வகைகளை நான் விரும்புகிறேன். அவற்றைச் சமைப்பதற்கு நான் எங்கு கற்றுக்கொள்ளலாம்?
71. தங்கள் மாநிலத்தில் என்னென்ன மொழிகள் பேசப்படுகின்றன?
72. தங்கள் மாநிலத்தின் அலுவலக மொழி / மொழிகள் என்ன?
73. உங்கள் நகரத்தில் திரையரங்குகள் உள்ளனவா?
74. உங்கள் நகரத்தில் திரைப்படம் பார்க்க எந்த இடங்களுக்குச் செல்லலாம்? அங்கு எப்படிச் செல்வது?
75. உங்கள் ஊரில் நாடகங்கள் அரங்கேறுகின்றனவா? எங்கே? எப்பொழுது? அங்கு எப்படி சென்றடைவது?
76. உங்கள் நகரத்தில் என்ன பாரம்பரிய பொம்மைகள் செய்யப்படுகின்றன? அவற்றை எங்கே வாங்க முடியும்?
77. மக்கள் இங்கு என்ன தொழில்/வேலை செய்கிறார்கள்?
78. உங்கள் நகரத்தில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்கள் யாவை? அவை புகழ்பெறக் காரணம் என்ன? அவற்றின் சிறப்புத் தன்மை என்ன?
79. உங்கள் பகுதியில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் எவை?
80. உங்கள் நகரத்தில் உள்ள போக்குவரத்து வசதிகள் என்னென்ன?
81. உங்கள் ஊரில் சட்டம் ஒழுங்கு எப்படி உள்ளது?
82. உங்கள் நகரத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்ற சந்தைகள் எவை? அவை எதற்குப் பிரபலமானவை?

**சீருடை**

83. உங்கள் நகரத்தில் உள்ள வித்தியாசமான ஆடைகளைப் பற்றி எங்களிடம் கூற முடியுமா?
84. உங்கள் நகரத்தில் எந்த வகையான ஆடைகள் அணியப்படுகின்றன?
85. உங்கள் நகரத்தில் உள்ள வித்தியாசமான ஆடைகளின் பின்னணியில் உள்ள கதைகளை எங்களிடம் கூற முடியுமா?
86. உங்கள் நகரத்தின் ஆடைகளில் என்னென்ன வண்ணங்கள் , வடிவமைப்புகள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன?
87. உங்கள் நகரத்தில் விழாக் காலங்களில் என்ன ஆடைகள் அணியப்படுகின்றன?
88. உங்கள் மாநிலத்தின் மரபுசார்ந்த உடை என்ன? மக்கள் எந்த வகையான ஆடைகளைக் குளிர்காலத்தில் அணிவார்கள்? நீங்கள் என்ன வகையான ஆடைகளைக் கோடைகாலத்தில் அணிவீர்கள்?

**ஆளுமைகள் / போர்வீரர்கள்**

**89.** உங்கள் நகரின் உள்ளூர் விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றி நான் அறிய விரும்புகிறேன். உங்கள் நகரத்தின் விடுதலைப் போராட்ட வீரர்களை கூற முடியுமா? விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் பங்கு என்ன?
90. தங்கள் நகரத்தின் விடுதலைப் போராட்ட வீரர்களின் கொள்கைகளையும் பங்களிப்புகளைகளையும் பற்றி கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு எந்த உள்ளூர் சான்றுகள் பயனுள்ளதாக இருக்கும்?
91. உங்கள் மாநிலத்தில் இந்திய விடுதலைப் போராட்டம் தொடர்பான முக்கியமான இடங்கள் எவை?
92. உங்கள் மாநிலத்தின் முக்கிய விடுதலைப் போராட்ட வீரர்கள் யார்?
93. உங்கள் மாநிலத்தின் முக்கிய பெருந்தகையர் யாவர்?
94. உங்கள் மாநிலத்தின் வீரத்திற்கான விருதுகள் பெற்றவர்களின் பெயர்களைக் கூறுங்கள்?

**விளையாட்டு**

95. உங்கள் நகரத்தில் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டு எது?
96. உங்கள் நகரில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விளையாட்டு முக்கியதுவம் வாய்ந்ததற்கான வரலாறு உள்ளதா?

**97.** நகரத்தில் எந்த வகையான விளையாட்டுகள் முக்கியமாக விளம்பரப்படுத்தப்படுகின்றன**?**

98. உங்கள் நகரத்தில் எத்தனை விளையாட்டு வளாகங்கள். அரங்கங்கள் உள்ளன?

99. உங்கள் நகரத்தில் ஏதேனும் சிறப்பு விளையாட்டு நிகழ்வுகள் அல்லது போட்டிகள் உள்ளதா?

100. உங்கள் நகரத்தில் ஏதேனும் ஒரு வீரர் தேசிய அல்லது உலக அளவில் முக்கிய போட்டியில் கலந்து கொண்டுள்ளாரா?

101. உங்கள் நகரத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் , அணிகளின் பெயர்கள் என்னென்ன? அவற்றில் முக்கிய சாதனைகள் என்னென்ன?

**வழிபாட்டுத் தலம்**

102. உங்கள் நகரத்தில் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களைப் பற்றி சொல்ல முடியுமா? அங்கு எப்படிச் சென்றடைவது?

**நாட்டுப்புற பாடல்கள் மற்றும் நாட்டுப்புறவியல்**

103. உங்கள் நகரத்தின் புகழ்பெற்ற நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புறக் கதைகள் யாவை?

104. உங்கள் நகரத்தின் முக்கிய நாட்டுப்புறப் பாடல்களின் பெயர்களைச் கூற முடியுமா?

105. உங்கள் நகரத்தின் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புறவியல் புத்தகங்கள் எங்கு கிடைக்கும்?

**வியாபாரம்**

106. பொதுவாக, இங்குள்ள மக்கள் எந்த வகையான தொழில் / தொழிற்சாலைகளை நம்பி வாழ்கிறார்கள்?

107. எந்த விதமான தொழிற்சாலைகள் இங்கு அதிகம் உள்ளன?

**சுற்றுச்சூழல்**

108. உங்கள் மாநிலத்தில் எவ்வித ஆற்றல் சார்ந்த வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன?

109. உங்கள் மாநிலத்தில் மாற்று வள ஆதாரங்கள் என்னென்ன?

110. உங்கள் மாநிலத்தில் குப்பைகளை அகற்ற என்ன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன?

111. உங்கள் மாநிலத்தில் குப்பைகள் மறுசுழற்சி செய்யப்படுகின்றனவா?

112. தேவையற்ற பாலித்தீன், பிளாஸ்டிக் பயன்பாட்டை நிறுத்த உங்கள் மாநிலத்தில் உள்ள முறை என்ன?